பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 19 புதன்கிழமை 04.12.2024 கதிர் 027

**இனி இது ரகசியம் அல்ல!**



அடுத்து வரவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் போன்றவற்றில் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி விடுவதற்கு ரெலோ ☞2

**எதிர்க் கட்சித் தலைவர் பகிரங்கக் குற்றச்சாட்டு**

## ஊடக சுதந்திரம், சிவில் உரிமைகளை பறிக்கிறது தற்போதைய ஆளும்தரப்பு

**சமூக ஊடகப் பதிவுகள் குறித்த கைதுகள் தொடர்பில் கருத்து**

தற்போதைய ஆளும்தரப்பு, தேர்தல் மேடைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவோம் எனக் கூறியது. ஆனால் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகளைப் பறிக்கும் வகையில் தற்போது செயற்பட்டு வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீதானவிவாத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்று கையில், ☞2

## கைதான இந்திய மீனவர்கள் 18 பேரும் விளக்கமறியலில்

எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட காரைக்கால் மீனவர்கள் 18 பேரையும் டிசெம்பர் 10 வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

காரைக்கால் மீன் பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க நேற்று அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 இந்திய மீனவர்களும் யாழ்ப்பாணம் ☞8

## புதிய அரசமைப்பு உருவாகும்போது மலையக தமிழருக்கு தீர்வு தேவை

**இராதாகிருஷ்ணன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து**

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் போது மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். அத்துடன் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதன்மூலம் இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அல்லது சீனாவுடன் ஒன்றுசேர்ந்து எதையும் சாதிக்க முடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ☞8

## ஆளும்தரப்போடு சேர்ந்து பயணிக்க விரும்புகிறோம்

**தமிழ் அரசின் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு**

ஆளும்தரப்போடுஎமது கரங்களைச்சேர்த்துப்பயணிக்கவிரும்புகின்றோம். உங்களின் பலமான மாற்றங்களோடு தமிழ் மக்கள் தமது மாற்றங்களை நோக்கி நகரவும் நாங்கள் தயாராகவிருக்கின்றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தின்போது இதனைத் தெரிவித்தார். அவர் ☞8

# மாகாண சபை முறைமை 3 ஆண்டுகளுக்கு நீடிக்கும்

**அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு**

இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசமைப்பில் காணப்படுகின்ற மாகாண சபை முறைமையானது புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும்வரை செயற்பாட்டில் இருக்கும். தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசியலமைப்பு சுமார் 3 ஆண்டுகளில் மக்கள் அனுமதிக்காக முன்வைக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா 'வீரகேசரி' வார வெளியீட்டுக்கு வழங்கிய விசேட செவ்வியில் 'அரசமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாணசபை முறைமையை ஒழித்து, புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமை கிடைப்பதை உறுதிசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்கு தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலும் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் ☞2

## வெள்ள இடர் குறித்து நாளை சபை விவாதம்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நிலவிய மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட இடர் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை நாளை மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை நடத்துவதற்கு சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி, ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான விவாதம் நாளை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. தொடர்ந்து ஜனாதிபதியின் உரையின் மீதான வாக்கெடுப்பு பி.ப 5.00 மணிக்கு இடம்பெறும். முடிவடைந்ததும் பி.ப 5.30 மணிக்கு எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் இடர் நிலைமைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**மாகாண சபை விவகாரம்**

## ஜனாதிபதியை இந்த வாரம் சந்தித்து தமிழ் அரசு பேச்சு

**உடன் ஏற்பாடு என்கிறார் சபை முதல்வர் பிமல்**

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிஜனாதிபதியைஇந்தவாரம்சந்தித்துகலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். மாகாண சபை முறைமை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நிலைப்பாட்டை அறிந்துக் கொள்ளலாம் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, மாகாண சபை முறைமை குறித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற ☞9

## மாகாண சபைகளை நீக்குவது தமிழர் உணர்வைப் பாதிக்கும்

**ஜனாதிபதிக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கடிதம்**

மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுமாயின், அது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் செயல் என்பதை ஆளும்தரப்புபுரிந்துகொள்ளவேண்டும்என்றுஈ.பி.டி.பி. கட்சியின்செயலாளர்நாயகமான முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சிப் பீடமேறியுள்ள தற்போதைய ஆளும் தரப்பினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பில் 13ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படும் என்று ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களுள் ஒருவரான ரில்வின் சில்வா, வீரகேசரி பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அண்மையில் தெரிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின்செயலாளர் நாயகத்தினால் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தற்போதைய அரசமைப்பில்உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை ☞8

## இடர் முகாமைத்துவ தேசிய சபையை விரைவில்கூட்டி உடனடி நடவடிக்கை

**தேவை என எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து**

வெள்ளம், மண்சரிவு, கடும் குளிர் ஆகிய இயற்கை இடர்கள் காரணமாக சுமார்5இலட்சம்மக்கள்துயரத்தினாலும் அழுத்தத்தினாலும்பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இடர் முகாமைத்துவ தேசிய சபையை விரைவாக கூட்டி, இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞8

## இனி இனவாதத்திற்கு இடமில்லை

**பிரதமர் ஹரினி திட்டவட்டம்**

அரசியலுக்காக மாகாணங்களையும், மக்களையும் வேறுப்படுத்திய காலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இனவாதம்தலைதூக்குவதற்குஇனி இடமளிக்கபோவதில்லை.அரசியலில் தோல்வியடைந்துள்ளவர்கள் மீண்டும்இனவாதத்தைதூண்டிவிட முயற்சிக்கிறார்கள். இனவாத செயற்பாடுகளை தோற்கடிக்க கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.அனைத்து ☞8

## இனி இது .....

எடுத்த முயற்சிகள் முட்டுக்கட்டையில் நிற்கின்றன. ரெலோவுக்கு அபயம் அளித்து அரவணைக்க சிறீதரன் தயாராக இருக்கிறார் என்றாலும் கிழக்கிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும்ரெலோவில்உள்ளசிலரின் பெயர்களைக்குறிப்பிட்டுஅவர்களையெல்லாம் ரெலோ தேர்தலில் நிறுத்தும் என்றால் சேர்ந்து போட்டியிட முடியாது என்று அந்தந்த மாவட்டங்களில் கடும் எதிர்ப்புக் கிளம்பியதால் ரெலோவின் பின்கதவு 'டீல்'கள் எவையும் இதுவரை படியவில்லை.

கிழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா, வவுனியாவில் மயூரன், யாழ்ப்பாணத்தில் சுரேன் குருசாமி போன்ற சிலரைத் தேர்தலில் நிறுத்தினால் சேர முடியாது என்பதில் அந்தந்த மாவட்ட தமிழ் அரசுக் கட்சியினர் தீவிரமாக உள்ளனர். கடந்த பொதுத் தேர்தலுடன் தான் தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்குகிறார் என்று ஜனா பகிரங்கமாக அறிவித்தார். ஆனாலும் தமிழ் அரசின் முதுகில் சவாரி செய்வதானால் அவரும் மாகாண சபைத் தேர்தலுக்குத் தயார் என்று கிழக்கில் இந்தப் பின்கதவுப் பேச்சில் ஈடுபட்ட ரெலோ தரப்பினரால் தமிழ் அரசுடன் பேசப்பட்டுள்ளது. ஆனால் அதை தமிழ் அரசு தரப்பினர் ஏற்கவில்லை.

தேர்தலில் தோற்றவர்களுக்கு வாய்பளிப்பதில்லை என்கிற தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்று அதன்படி வேட்பாளர்களைத் தருவதாக இருந்தா-ல் மட்டுமே ரெலோவோடு சேர்வது குறித்துப் பரிசீலிக்கலாம் என்பதுதான் தமிழ் அரசின் பெரும்பாலானவர்களின் நிலைப்பாடு. தேர்தல்களில் ஏற்கனவே வெற்றி பெற்றவர்கள் அல்லது புதியவர்களை தேர்தலில் நிறுத்தவேண்டும் என்பதுதான் இப்போதைக்கு தமிழ் அரசு முன்வைக்கும் நிபந்தனை. ஆனால் ரெலோவுக்கோ பொதுத் தேர்தலில் தோற்ற தமது தலைமைக்குழு உறுப்பினர்களை எப்படியாவது மாகாண சபையிலாவது நிறுத்திவிடவேண்டும் என்பதுதான் எண்ணம் என்பதால் இந்த 'டீல்' அவ்வளவு இலகுவில் ஈடேறும் போன்று தோன்றவில்லை.

இதையடுத்து வழக்கம் போலவே, இரண்டு படகுகளில் பயணிக்கும் தனது உத்தியின்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ் அரசு விரோத சக்திகளைக் கொண்டு வந்து அதனைப் பலப்படுத்தி அவற்றின் வாக்குகளையும் சேர்த்து தாங்கள் பயன்பெற முடியுமா என்கிற கணக்கிலும் காய்நகர்த்தல்கள் இடம்பெற்று வருகின்றன. அரசனை நம்பி புருசனைக் கைவிடுவது நல்லதல்லத்தானே!

பொதுத் தேர்தலில் அடைந்த படு தோல்வியைத் தொடர்ந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமது மீட்சிக்கு என்ன செய்வது என்று தெரியாது திணறிவருகின்றது. கூட்டணியின் தோல்விக்கு சிறீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈபிஆர்எல்எவ் போன்ற மக்கள் ஆதரவற்ற சக்திகள்தான் காரணம் என்று சில 'மதியுரைஞர்கள்' சொல்லப்போக, அதனை நம்பிக்கொண்டு இந்தக் கட்சிகளைக் கூட்டணிக்குள் 'டம்மி' ஆக்கிக்கொண்டு புதிய அணிகளை உள்வாங்குவதற்கான காய் நகர்த்தல்களை ரெலோவும் புளொட்டும் தொடங்கியுள்ளன.

தங்கள் இரு கட்சிகளுக்கும் மக்களிடம் செல்வாக்கு இருப்பதைப் போலவும் மற்றைய மூன்று தரப்புக்களுக்கும் செல்வாக்கு இல்லாததால்தான் தமது அணி தோற்றது என்பதைப் போலவும் தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக்கொள்ள இந்த இரு கட்சிகளும் முற்பட்டுள்ளன. இதனால் தோல்விப் பழியை அவர்கள் மீது சுமத்திவிட்டு அவை தப்பிக்கப் பார்க்கின்றன.

இந்த அடிப்படையில் தமிழ் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி என்பவற்றை இனிவரும் தேர்தல்களில் சம தரப்பாகப் பார்க்காமல் ரெலோ மற்றும் புளொட்டிற்கான ஒதுக்கீட்டுக்குள் ஒரு உப குழுவாக உள்ளடக்குவது என்றும் தமிழ் அரசில் இருந்து பிரிந்து ஜனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்று தங்களை விழித்துக்கொள்ளும் மாம்பழ அணியையும் கிளிநொச்சியில் உள்ள சந்திரகுமார் கட்சியையும் தம்மோடு சம தரப்புக்களாக இணைத்துக்கொள்வது என்றும் திட்டங்களை நகர்த்தி வருகின்றன. இந்த இரண்டு தரப்புக்களும் பொதுத் தேர்தலின்போது ஜனநாயகக் கூட்டணியோடு சேரக் கேட்டன. அப்போது அதற்கு மறுத்து விட்டார்கள். பின்னர் பொதுத் தேர்தலில் இந்த எல்லாத் தரப்புக்களுமே தோற்றுத்தான் விட்டன. இப்போது தோற்றாலும் பரவாயில்லை என்று அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு கூட்டணிக்குள் தயாராகிவிட்டனர்.

மாம்பழக் கூட்டணிக்குள் இது தொடர்பில் பத்திரிகை முதலாளியுடன்தான் பேச்சு நடக்கிறது. ஏற்கனவே அந்தக் கூட்டணிக்குள் தலைவராக இருந்தவரான சட்டத்தரணிக்கும் முதலாளிக்கும் புகைச்சல் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுபோக, அந்தக் கூட்டணிக்குள் இருக்கும் ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கம் ஏற்கனவே தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பில் இருந்த 7 கட்சிகளில் ஒன்று. பொதுக் கட்டமைப்பைவிட்டுத் தனித்துச் சென்றால் அந்தக் கூட்டில் இருந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு சேரமாட்டேன் என்று ஒற்றைக் காலில் நின்றதால்தான் ஐங்கரநேசன் மாம்பழக் கூட்டணிக்கே வந்தார்.

ஆகமொத்தத்தில் மாம்பழக் கூட்டணியில் இருந்து பத்திரிகை முதலாளியும் சில சில்லறைகளும் ஜனநாயகக் கூட்டணியோடு சேரலாமே தவிர, அதிலுள்ள முக்கியமான தலைகள் வருவதற்கு வாய்ப்பில்லை என்கிறார்கள். தமிழ் அரசியல் பரப்பு குழம்பிய குட்டையாகவும் அதற்குள் மீன்பிடிப்பதற்கான முயற்சியாகவும் இன்னும் சில காலத்திற்குத் தொடரும் என்றே தெரிகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதற்கு நாடாளுமன்றத்திலும் பதிலளித்துள்ளார். மாகாண சபை முறைமை தொடர்பில் ஆளும்தரப்பு இதுவரை உறுதியானதொரு தீர்மானத்தை எடுக்கவில்லை. மூன்று ஆண்டுகளின் பின்னரே புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எமக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. மக்களுடனும் இது குறித்துக் கலந்துரையாட வேண்டியுள்ளது.

மாகாணசபை முறைமை குறித்த தீர்மானங்கள், பரிந்துரைகளை மக்களும் முன் வைக்கலாம். அதன் பின்னர் அதிகாரப் பகிர்வு குறித்து நாம் கலந்துரையாடுவோம். அதுவரை மாகாணசபை முறையை இரத்து செய்யப் போவதில்லை. அத்தோடு மாகாண சபைகள் தற்போதிருப்பதைப் போலவே நிர்வகிக்கப்படும்.

புதியஅரசமைப்புவரும்வரைதற்போதுள்ள அதிகாரங்களுடன் மாகாண சபைகள் நிர்வகிக்கப்படும். மாறாகமேலதிகஅதிகாரங்கள் எவற்றையும் வழங்கவோ, இருக்கும் அதிகாரங்களைக் குறைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. டில்வின் சில்வா ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளராவார். புதிய அரசமைப்பிற்கான கலந்துரையாடலுக்காகக் காத்திருக்கின்றோம் என்பதே ஆளும்தரப்பின் நிலைப்பாடாகும் என்றார்.

## ஊடக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடக அடக்குமுறைகளில் ஈடுபடுவது நியாயமான செயலல்ல. தற்போதைய ஆளும்தரப்பு பெரும் மக்கள் ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகத் துறையின் கூடிய ஆதரவு கிடைத்தது.

நீக்குவோமென சொல்லப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி சமூக ஊடக ஆர்வலர்களை அடக்குமுறைக்குட்படுத்துகின்றனர். சொன்னதை செய்யும் ஆளும்தரப்பாக இருந்தால் இந்த அடக்குமுறையை நிறுத்த வேண்டும்.

ஆளும்தரப்பு நீக்குவதாக கூறிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சமூக வலைத்தல ஆர்வலர்களை கைது செய்தாலும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்களை அவ்வாறு கைது செய்ய முடியாது என நீதிபதிகள்கூடக் கூறியுள்ளனர்.

அவ்வாறேபயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் யாரையெல்லாம் கைது செய்யலாம் என்பது குறித்தும் இந்த ஆளும்தரப்புக்கு நீதிமன்றம் பாடமும் புகட்டியுள்ளது. தேர்தல் மேடைகளில் தற்போதைய ஆளும்தரப்பு சொன்னதைச் செய்ய வேண்டிய நேரம்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இனவாதத்தை தூண்ட முயற்சி அமைச்சர் நளிந்த குற்றச்சாட்டு

தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மததீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக பயன்படுத்தியவர்கள்தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் காலத்தில் இனவாதத்தையும் மததீவிரவாதத்தையும் எங்களிற்கு எதிராக எப்படி தேர்தல்வாக்களிப்பிற்கு முன்னர் பயன்படுத்தினார்கள் என உங்கள் மனச்சாட்சியை கேட்டுப்பாருங்கள்.

தேர்தல் காலத்தில் எங்களிற்கு எதிராக வேண்டுமென்றேபொய்களைபரப்பினார்கள். எங்களை தெரிவு செய்தால் மக்கள் தங்கள் மதநம்பிக்கைகளை பின்பற்ற முடியாத நிலை ஏற்படும் எங்களிற்கு எதிராக இந்த கதைகளை பரப்பியவர்கள் தற்போது இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர். எந்தகாரணத்திற்காகவும் இனவாதம் தலைதூக்குவதற்கு அனுமதிக்கமாட்டோம் என்றார்.

# அருச்சுனா பண்பற்றவர் என்று எதிர்க் கட்சி எம்.பி.க்கள் சீற்றம்

படித்திருந்தாலும் பண்பற்றவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அருச்சுனாவை நேற்று நாடாளுமன்றத்தில் விமர்சித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவின் குற்றச்சாட்டுக்களை அடுத்து எழுந்த அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளரிடம் மிகக் கேவலமான முறையில் நடந்துக் கொண்டார். இவரை எதிர்க்கட்சி பக்கம் அமர வைக்காமல் எங்காவது பிறிதொரு இடத்தில் ஆசனத்தை வழங்குங்கள். இவரின் மோசமான செயற்பாடு குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடளித்துள் ளோம். பொருத்தமற்ற இவரை எதிர்க்கட்சி பக்கம் அமர வைக்காதீர்கள் வேறு எங்கேயாவது ஒரு புறம் அமர வையுங்கள் என்றார்.

பின்னர் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா, சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பின ரான அருச்சுனா நான் அவரை தாக்கினேன் என்று பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத் துள்ளார். அதனை நான் மறுக்கின்றேன். அப்படி எதுவும் நடக்கவில்லை. தகாத வார்த்தை களை பேசி இவர்தான் என்னை அச்சுறுத்தினார் - என்றார். இவ்விடயத்தை இரு தரப்பும் சபாநாயகரிடம் முறையிடுங்கள் என சபைக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவித்தார்.

இதனையடுத்து சிறிது நேரத்தின் பின்னர் எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா சுஜித் என்னை அடித்தார். என்னாலும் அவரைத் திருப்பி அடித்திருக்க முடியும். ஆனால் அவர் என் தந்தையைப் போன்றவர். நான் அடித்திருந்தால் அவர் அவசர சிகிச்சைப்பிரிவுக்குத்தான் சென்றிருக்கவேண்டும் என்றார்.

### கல்வி அமைச்சின் முன்பாக

# போராட்டத்தை அடக்க பொலிஸ் முற்படவில்லை

### பிரதமர் ஹரினி விளக்கம்

கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸார் ஈடுபடுத்தப்படவில்லை என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

முழு அரச சேவையிலும் எந்த திட்டமும் இன்றி அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்து குழுக்களின் பிரச்சினைகளையும் தீர்க்க ஆளும்தரப்பு தலையிடும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்தரப்புகளால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது. நாம் ஒரு போதும் அவர்களது போராட்டத்தில்பொலிஸாரைஈடுபடுத்தவில்லை. அப்போது அங்குள்ள நிலவரத்தை வைத்து பொலிசார் எடுத்த நடவடிக்கை ஒன்றும் போராட்டத்தைஒடுக்கஎடுக்கப்பட்டநடவடிக்கை அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்த முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் பிரதி அமைச்சர் அருண்

தேர்தல் வெற்றியுடன் நாட்டின் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தும் வகையில் ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். இவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அயலுறவு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு துறைகளில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

தூதுவர் நியமனம் மற்றும் இராஜதந்திர நியமனத்தில் காணப்படும் முறைகேடுகள் ஆராயப்படும். வெளிநாட்டு நியமனங்கள் முழுமையாக மறுசீரமைக்கப்படும்.

வெளிநாட்டுதொழில்வாய்ப்புவிவகாரத்தில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. கடந்தஆளும்தரப்பின்ஒருசிலதீர்மானங்களால் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன.

இவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. பொறுப்பான ஆளும்தரப்பு என்ற ரீதியில் சவால்களை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

தேசியமக்கள்சக்தியின்வெற்றியுடன்தேசிய ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பெரும் ஆளும்தரப்பு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பாரம்பரியமான அரசியல் தரப்பினரை புறக்கணித்து எம்மக்கள் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தேர்தல் வெற்றியுடன் ஒருமுகப்படுத் தப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தும் வகையில் ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை விடயத்தில் முன்னர் கொண்டிருந்த கடப்பாடுகளை இப்போது ஈடேற்றுவீர்களா?

## பிரிட்டிஷ் அமைச்சரிடம் உமா குமரன் எம்.பி. கேள்வி



இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் மற்றும் கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் என்பன குறித்து முன்னர் கொண்டிருந்த கடப்பாடுகளைத் தற்போது நிறைவேற்றுவீர்களா என பிரிட்டனின் வெளிவிவகார செயலாளர் டேவிட் லெமியிடம் அந்நாட்டுப் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வெளிவிவகாரக்குழுக் கூட்டத்திலேயே இலங்கையைப் பூர்விகமாகக்கொண்ட பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன், வெளிவிவகார செயலாளர் டேவிட் லெமியிடம் மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

'நவம்பர் 27 உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கு முக்கியமான நாளாகும்' என்று சுட்டிக்காட்டிய உமா குமரன், 'கடந்த 2023 ஆம் ஆண்டு தமிழர்களுக்குத் தோள் கொடுக்குமாறும், மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை பரிசீலிக்குமாறும் நீங்கள் பிரிட்டன் அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தீர்கள்.

அதுமாத்திரமன்றி ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் சர்வதேச நீதிப்பொறிமுறை தொடர்பான பரிந்துரையைப் பரிசீலிக்குமாறு அப்போதைய எதிர்க்கட்சித்தலைவரும் வலியுறுத்தியிருந்தார். இப்போது நீங்கள் வெளிவிவகார செயலாளர். அவர் பிரதமர். எனவே நீங்கள் உங்களது முன்னைய கருத்துக்களின்படி செயற்படுவீர்களா? மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பீர்களா?' என டேவிட் லெமியிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வெளிவிவகார செயலாளர் டேவிட் லெமி, 'தற்போது இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறியிருக்கிறது. அத்தோடு கடந்தகால மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட விடயத்தில் முன்னேற்றகரமான சமிக்ஞைகள் தென்படுகின்றன. அதேவேளை கடந்தகால மீறல்களுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு கொள்கைகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம். மேலும் அத்தகைய மீறல்களில் ஈடுபட்டவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவது மிக அவசியமாகும்' என்று தெரிவித்தார்.

# கிளிநொச்சி பதில் அரச அதிபருடன் சுவிஸ் தூதுரக அதிகாரிகள் சந்திப்பு





இலங்கைக்கான சுவிஸ் தூதரக மற்றும் குடிவரவு - குடியகழ்வுத் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனை திங்கட்கிழமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார நிலைவரங்கள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் மற்றும் புகலிடக்கோரிகைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 112



# மதரஸா மாணவர்களின் இறப்பு: சுயாதீன விசாரணை அவசியம்

## ரிஷாத் சபையில் வலியுறுத்து

காரைதீவு - மாவடிப்பள்ளி வீதியில், உழவு இயந்திரம் கவிழ்ந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்த துயர சம்பவம், தொடர்பில் சுயாதீனமான விசாரணையை நடத்த வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் சபையில் வலியுறுத்தினார்.




நேற்றைய நாடாளுமன்ற அமர்வில், ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து, அவர் மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர் -

'அம்பாறை மாவட்டத்தில், மாவடிப்பள்ளியில் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களது வீடுகளுக்கு நான் கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்திருந்தேன். அப்போது, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பொலிஸாரின் பொறுப்பற்ற செயற்பட்டாலேயே இந்தத் துயர சம்பவம் நிகழ்ந்ததாக குற்றஞ்சாட்டி விசனம் வெளியிட்டார்.

குறிப்பாக, இந்த சம்பவம் இடம்பெற்ற போது, பொலிஸார் கடமையில் இருந்திருக்கிறார்கள். வெள்ளப் பாதிப்பால், மதுரஸாவிலிருந்து வெளியேறுவதற்கு வழி இல்லாததன் காரணமாகவே, மதரஸா நிர்வாகம் மாணவர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி அனுப்பியிருக்கின்றது.

இவ்வாறு அவர்கள் அந்தப் பாதையில் பயணித்த போது, வீதியில் வெள்ளம் பெருக்கெடுத்திருந்தநிலையில், பொலிஸார் வீதியை மூடாமல், போக்குவரத்துக்கு அனுமதி அளித்தமை பொறுப்பற்ற செயற்பாடாகும். அவர்களை தடுத்து நிறுத்தி நிலைமையை விளக்கியிருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, சம்பவம் இடம்பெற்று சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு பிற்பாடு, கடற்படையினர் வருகை தந்து, அவர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதுவரைக்கும், பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, அங்கிருந்தவர்கள் இரண்டு உயிர்களை முயற்சி செய்து காப்பாற்றி இருக்கிறார்கள். இதன்போது, அங்கிருந்த பொதுமக்கள், வெள்ளத்தில் சிக்குண்டவர்களை காப்பாற்றுமாறு பொலிஸாரிடம் கெஞ்சிய போது, பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் தெரிவித்திருகின்றார்கள். பொலிஸ் நிலையத்துக்கு அவர்கள் சென்று, ஒரு மணித்தியாலம் வரை முறைப்பாட்டை செய்வதற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

ஓர் அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கான துரித பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடாது, இந்த மக்களை இவ்வாறு அங்குமிங்கும் செல்லுமாறு பணித்திருப்பது கவலை தருகின்ற விடயம்.

எனவே, இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை ஒன்றை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முன்னெடுக்க வேண்டும் என்று, இந்த உயர் சபையில் கோரிக்கை விடுக்கின்றேன். - என்று கூறினார்.

இதற்குபதில்வழங்கியசபை முதல்வர் பிமல் ரத்நாயக்க -

மேற்படி, சம்பவம் தொடர்பில் ஏலவே நாம் கலந்துரையாடியுள்ளோம். மேலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் விரிவாக ஆராய எண்ணியுள்ளோம். இந்த விடயம் தொடர்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வார். - என்று கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பகிரங்கமாக விளக்கமளியுங்கள்

தேசிய மக்கள் சக்தியின் முதுகெலும்பான ஜேவிபிக்குள் இருக்கும் பழைமைவாத சிந்தனைப் போக்காளர்களால் அதன் எதிர்காலமுற்போக்குத்திட்டங்கள்சவாலுக்குஉள்ளாகும்என்பதை இந்துப்பத்தியில்முன்னர்ஒருதடவைசுட்டிக்காட்டியிருக்கின்றோம். குறிப்பாக ஆட்சி அதிகாரத்தில் முக்கியமான அரசுத் தலைவர் பதவியை அநுரகுமார திசநாயக்கவும் தலைமை அமைச்சுப் (பிரதமர்) பதவியை ஹரினியும் வைத்திருந்தாலும் ஜேவிபியின் கட்டுப்பாடு முழுமையாக ரில்வின் சில்வாவின் கைகளிலேயே இருப்பதால் ஆளும்தரப்பின் வேகத் தடையாக அவர் இருப்பார் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இப்போது அது நடந்தேறுகின்றது. மாகாண சபைகளை ஒழிப்போம்என்றுரில்வின்சில்வாகொழும்பில்வெளியாகும்தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார். புதியஅரசமைப்பில்தமிழ்மக்களுக்கானதீர்வுமுன்வைக்கப்படும் என்றும் மாகாண சபையைத் தொடக்கம் முதலே தமது கட்சி எதிர்ப்பதால்அதுஒழிக்கப்படும்என்றும்அவர்தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்களும் மாகாண சபையை ஒரு தீர்வாக ஏற்கவில்லை என்பதையும் கடந்த 37 வருடங்களில் மாகாண சபையால் தமிழர்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்றும் கூறி தனது வாதத்தை அவர் நியாயப்படுத்தவும் முயன்றிருக்கின்றார்.

ரில்வினின் கருத்து தமிழ்க் கட்சிகள் அனைத்திடமிருந்தும் பரவலான எதிர்ப்பை உடனடியாகவே ஈர்த்துள்ளது. ரில்வினின் கருத்து அரசுத் தலைவரின் தேர்தல் அறிக்கையிலிருந்தும் அதற்கு வழங்கப்பட்ட மக்களாணையில் இருந்தும் விலகிச் செல்கின்றது, எனவே தனது வாக்குறுதிகளை ஆளும்தரப்பு கைவிடுகின்றதா என்று அவை கேள்வி எழுப்பத் தொடங்கியிருக்கின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக மாகாண சபை இல்லாதபோதும், தமது நீண்ட கால அரசியல் போராட்டத்தின் விளைவாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்வு முயற்சி என்ற வகையில் தமிழர்கள் மாகாண சபையைக் கருதுவதால் புதிய அரசமைப்பு மூலம் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணும் வரையும் மாகாண சபை முறைமை தொடரும் என்று அரசுத் தலைவர் தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தார்.

அதுபோக, 2015 முதல் 201-9 வரையில் நல்லாட்சி என்ற பெயரால் அழைக்கப்பட்ட ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய அரசமைப்புக்கான முயற்சி தொடரும் என்றும் அரசுத் தலைவரின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அந்த அரசமைப்பு வரைபில் மாகாண சபை முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் ரில்வினின் கருத்து அதனுடன் முரண்படுகின்றது என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் ரில்வினின் கருத்துத்தான் ஆளும் தரப்பின் நிலைப்பாடா என்று உறுதிப்படுத்தும்படி தமிழ் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சபை முதல் பிமல் ரத்நாயக்க, இந்த விடயம் தொடர்பில் அரசுத் தலைவருடன் பேசுவதற்கு தமிழ் அரசுக் கட்சியினருக்கு இந்த வாரம் நேரம் பெற்றுத் தரப்படும் என்று பதிலளித்திருக்கிறார்.

இந்த விடயத்தில ஏற்பட்டுள்ள சந்தேகம் தமிழ் அரசுக் கட்சியினருக்கு மட்டுமோ அல்லது அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமோ மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள சந்தேகம். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ள தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ள சந்தேகம். எனவே தமிழ் அரசுக் கட்சியினரைச் சந்தித்து இதற்கான விளக்கத்தை அரசுத் தலைவர் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக பகிரங்கமாகவே அரசுத் தலைவரும் தலைமை அமைச்சரும் தமது நிலைப்பாட்டை ஒட்டுமொத்த இலங்கைக்கும் தெரியப்படுத்தவேண்டும். அப்போதுதான் அது சிங்கள மக்களுக்கும் தெளிவாகப் புரியும்.

# ‘அஸ்வெசும’ கொடுப்பனவினை அதிகரிக்க ஆளும்தரப்பு முடிவு

அஸ்வெசும திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது என்று சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் எதிர்பார்ப்புக்கமையவே செயற்படுவோம். கடந்த காலங்களில் ஒட்டுமொத்த மக்களும் நாடாளுமன்றத்தை விமர்சித்தார்கள், புறக்கணித்தார்கள். நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை புதுப்பிக்கவேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய நாடாளுமன்றம் செயற்படவேண்டும்என்பதைஅனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தை கட்சியின் உறுப்பினர்களுக்கு தெளிவுப்படுத்தும் பொறுப்பு கட்சி தலைவர்களுக்கு உண்டு. அதனை விடுத்து ஊடகங்களுக்கு மத்தியில் மாத்திரம் ஆளும்தரப்பின் சிறந்த செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று குறிப்பிடுவது பயனற்றது.

காலநிலை சீர்கேட்டினால் முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. இடர்களினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்வதுடன்,பாதிக்கப்பட்டதரப்பினருக்கு உதவிகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு ஏக்கர் விவசாய பயிர்ச்செய்கைக்கு 25 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரிசி தட்டுப்பாட்டுக்கு வெகுவிரைவில் தீர்வு எட்டப்படும். ஆகவே அரிசி விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பொருளாதாரப் பாதிப்பினால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 55 சதவீதமான மாணவர்களின் கல்வி உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. 53.2 மாணவர்கள் பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதை வரையறுத்துள்ளார்கள். 29.1சதவீதமானமாணவர்கள் பழைய புத்தகங்களையும், கொப்பிகளையும் பயன்படுத்துகிறார்கள்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் ஊடாக கொடுப்பனவுகளை பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அடுத்த ஆண்டு முதல் பாடசாலை தவணை காலப்பகுதியில் 6000 ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப்படும். அதேபோல் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கும் இந்த 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

அஸ்வெசும நலன்புரி திட்ட கொடுப்பனவு தொகுதியில் முதல் தொகுதியில் இருந்த 4 இலட்ச பயனாளர்களுக்கான கொடுப்பனவை இம்மாதம் 31 ஆம்திகதியுடன்நிறைவுப்படுத்தகடந்தஆளும்தரப்பு தீர்மானித்திருந்தது. இந்த பயனாளர்களுக்கான கொடுப்பனவை 2025 மார்ச் 31வரை வழங்கவும், இரண்டாம்தொகுதியில்உள்ளபயனாளர்களுக்கான கொடுப்பனவை 2025 டிசெம்பர் 31வரை வழங்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதேபோல் ஏழ்மைநிலையில்உள்ளவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 8,500 ரூபா கொடுப்பனவை 10,000 ரூபாவாகவும், மிக ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் 15,000 ரூபாவை 17,500 ரூபாயாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்குவந்தால்அஸ்வெசுமநலன்புரிகொடுப்பனவு திட்டம் இரத்துச் செய்யப்படும் என்று முன்வைத்த குற்றச்சாட்டை தோற்கடித்துள்ளோம்.

அபிவிருத்திஉத்தியோகத்தர்களின்பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த ஆளும்தரப்பு எவ்விதமான திட்டங்களுமில்லாமல் இவர்களை சேவையில் இணைத்துக் கொண்டது. இவர்களுக்கான சேவை விடயப் பரப்பு பற்றி முறையான திட்டங்கள் ஏதும் கிடையாது. ஆகவே இவர்களின்பிரச்சினைகள்தொடர்பில்வெகுவிரைவில் தீர்மானம் எடுக்கப்படும்.

பேச்சு மற்றும் ஊடக சுதந்திரத்தை ஆளும்தரப்பு முடக்கவில்லை.சுதந்திரம்என்றுகுறிப்பிட்டுக்கொண்டு இனவாதத்தை பரப்பிவிடும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கமுடியாது.புதியஜனநாயகமுன்னணியின் உறுப்பினர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு தடை விதிக்கவில்லை. ஆனால் பயங்கரவாத அமைப்பின் சின்னங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. ஒரு தரப்பினர் தங்களின் இனவாத அரசியலுக்காக இவ்விடயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மருந்து கொள்வனவில் பிரச்சினை காணப் படுகிறது. முறைகேடான வகையில் மருந்து கொள்வனவு விவகாரத்தில் அமைச்சர் சிறை சென்றார். முன்னாள் அமைச்சர்கள் இன்று குற்றப்பு லனாய்வு திணைக்களம் செல்கிறார்கள். தேசிய மருந்துகட்டுப்பாட்டுஅதிகாரசபையில்முறைகேடுகள் காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். வெகுவிரைவில் மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்.

# புதிய பொலிஸ் பேச்சாளராக புத்திக மனதுங்க நியமிப்பு

## 57 அதிகாரிகளுக்கு இடமாற்றம்

பொலிஸ்ஊடகப்பிரிவின்புதியபணிப்பாளராகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்தவாவுக்குப் பதிலாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. புத்திக மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனதுங்க கந்தளாய்பிரிவில் இருந்து இப்பதவிக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பரீட்சை பிரிவின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லொக்குஹெட்டி கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மோசடி விசாரணை பிரிவிலிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி.கே.எஸ். பெரேரா பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வு பிரிவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்அத்தியட்சகர்கே.ஏ.உதயகுமார,புத்தளம் பிரிவில் இருந்து வலான ஊழல் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் 54 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு அமைய இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 பிரதி பொலிஸ்மா அதிபர்கள், 35 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 7 பொலிஸ் அத்தியட்சகர்கள், 7 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக இருந்த மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.டபிள்யூ.ஐ.எஸ். முத்துமால குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பதவியிலிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.எம்.எஸ். தெஹிதெனிய, நுகேகொடை பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் திருகோணமலையில் சிறப்புற நடந்தது

(ஹஸ்பர்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்டத்தின் பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமூக சேவைகள் திணைக்களமும் மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த மாற்றுத் திறனாளி நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளுடன் இடம் பெற்றது.





இம் முறை தொனிப் பொருளாக 'உள்ளடங்கிய மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவத்தை மேம்படுத்தல்' என்ற தொனிப்பொருளின் கீழ் குறித்த மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் கலை, கலைசார நிகழ்வுகளும் இதன் போது அவர்களது திறன்களை வெளிக்கொணர ஒரு களமாக அமைந்திருந்தது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொண்டதுடன் தனது உரையின் போது அவர் தெரிவித்தவை வருமாறு -

உங்களால் முடியாது என்று எதுவும் இல்லை அனைத்தும் உங்களால் முடியும். இந்த தினத்தை கொண்டாடுவதும் உங்களது திறமைகளையும் இம் மேடையில் கண்டு கொள்வதுடன் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக கூறினார்.

கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதில் மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் குருகுல சூரிய , மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் உட்பட பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் அபிவிருத்தி நிதிய உத்தியோகத்தர்கள் மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மலையகத்தில் தேங்காய் விலை ரூபாய் 200ஐ எட்டித் தொட்டது

(கேதீஸ்)

மலையக பெருந்தோட்ட வரலாற்றில் முதல் தடவையாக தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபாவை எட்டியுள்ளதுடன், தேங்காயின் விலை தாக்குப்பிடிக்க முடியாத வகையில் அதிகரித்துள்ளமையால் தாங்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக பெருந் தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருந்தோட்ட நகர் புற பகுதிகள் மற்றும் தோட்டப் பகுதிகளிலுள்ள கடைகளில் ஒரு தேங்காய் 180 முதல் 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

தோட்டத்தொழிலாளர்கள் தங்களது பொருளாதார நிலை காரணமாக மாதாந்தம் அதிகளவு தேங்காய்க்கு பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தேங்காயின் விலை வேகமாக உயர்ந்து வருவதால், தேங்காய் பால் பக்கற்றுகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாக மலையக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# நாடாளுமன்ற தவிசாளர் குழாம் பெயரிடப்பட்டது

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 143இன் பிரகாரம் பத்தாவது நாடாளுமன்றத்தில் சேவையாற்றுவதற்கான தவிசாளர் குழாத்தில் உள்ளடக்குவதற்கான உறுப்பினர்கள் முதலாவது கூட்டத்தொடரின் போது பெயரிடப்பட்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய நிலையில் இது தொடர்பில் சபாநாயகர் அறிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரின் போது சேவையாற்றுவதற்கான தவிசாளர் குழாத்துக்கு லக்ஷ்மன் நிபுண ஆராச்சி, இம்ரான் மகரூப், ரோஹினீ குமாரி விஜேரத்ன, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், கௌஷல்யா ஆரியரத்ன, சேன நாணயக்கார, சானக மாதுகொட, சஞ்ஜீவ ரணசிங்ஹ, அரவிந்த செனரத், கிட்ணண்செல்வராஜ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ரில்வின் சில்வாவின் 13 பற்றிய கருத்தால் வாக்களித்த தமிழ் மக்கள் அதிர்ச்சியில்

## சர்வதேச இந்து மத பீட செயலாளர் பாபு சர்மா வேதனை

அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்த ஜனத விமுக்தி பெரமுனவின் செயலாளர் ரில்வின் சில்வா புதிய அரசமைப்பு கொண்டு வந்ததன் பின்னர் 13 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்படும். அதேவேளை மாகாணசபை முறமையும் இல்லாமலாக்கப்படும் என்ற செய்தியை கேட்டு வாக்களித்ததமிழ் மக்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்த நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான நிலையை கொண்டுவருவதற்கான ஓர் அடிப்படை ஒப்பந்தமாகக் கருதப்பட்டது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வந்த



அரசுகள் அந்த 13 இனை முழுமையாக அமுல்படுத்த முடியாமல் பல தடங்கல்களை ஏற்படுத்தியதன் காரணமாகவே இலங்கை இந்திய ஒப்பந்தம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்பதே யதார்த்தம்.

காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன வழங்ப்படவே இல்லை இந்த நிலையில் ரில்வின் சில்வா 13 ஆவது திருத்தச்சட்டத்தின்படியும் மாகாணசபை முறமையின்படியும் உரிய தீர்வு கிடைக்கவில்லை என்பதும் அவரது தவறான வாதம் ஆகும்.

அரசுநடைமுறைப்படுத்தமுடியாததன்காரணமாக பின்னடைவை சந்தித்தது தான் உண்மை. முழுமையாக 13 ஐ அமுல்படுத்தியிருந்தால் நிச்சயமாக முழு தமிழ் மக்களும் அதனை பாராட்டி இருப்பர். அதேவேளை இலங்கை நாடு இந்த பொருளாதார சீரழிவில் இருந்து நிச்சயம் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

வடக்கு மக்கள் இந்த ஜனதா விமுக்தி பெரமுனவிற்கு தமிழ் மக்களுக்கு உரித்தான உரிமைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் வாக்களித்தார்கள். ஆனால் செயலாளர் ரின்வின் சில்வாவின் கருத்து வாக்களித்த வடக்கு மக்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது என பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற இடர் முகாமைத்துவ கூட்டத்தில் மணல் அகழ்விற்கு தற்காலிகத் தடை



மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் அதிகமானோர் ஈடுபடுவதனால் வயல் நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளது எனவே தற்காலிகமாகக் குறித்த பகுதிக்கான மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்திவைப்பதற்கானதீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தி பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

மட்டக்களப்புமாவட்ட அரசாங்க அதிபரும் ஜஸ்டினா முரளிதரன் ஒருங்கிணைப்பில் மாவட்ட செயலக மண்டபத்தில் திங்கட்கிழமை அனர்த்த முகாமைத்துகுழுகூட்டம் இடம்பெற்றது இதில் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களான கந்தசாமி பிரபு, இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், கலாநிதி எம்.எஸ்.எம்.ஹிஸ்புல்லா, முஹம்மட் சாலி நளீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திகுழு தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு பல்வேறு பட்ட விடையங்கள் பேசப்பட்டனஅதற்கு ஆக்கப்பூர்வமானபதில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த அனர்த்தம் தொடர்பாக சழல இடங்களில் இன்னும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டிருக்கலாம் என்ற பல்வேறுபட்ட விமர்சனங்கள் இடம்பெற்றிருந்தாலும் ஆக்கப்பூர்வமாகச் செயற்பட்ட அதிகாரிகளுக்கு நன்றிகள்.

இனிவரும் காலத்தில் இன்னும் எங்களைத் தயார் நிலையல் வைத்துக் கொள்ள வேண்டிய விடயங்களை தேவை இருக்கின்றது அதனை உணர்ந்து செய்ய வேண்டிய கடமை இருக்கின்றது இருந்தபோதும் கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்டிருந்த முறைசாராத அபிவிருத்திகள் இந்த அனர்த்தத்திற்கு ஒரு முக்கியமான காரணியாகும்.

எனவே இது தொடர்பாக நிரந்தரமான தீர்வை நோக்கிப் போகவேண்டியகட்டாயத்தில் இருக்கின்றோம் இனிவரும் காலங்களில் அபிவிருத்தியானது மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்தியாக இருக்க வேண்டுமே தவிர அபிவிருத்திபணிகள் எந்தவகையிலும் அன்றாட வாழ்க்கைக்குப்பாதகங்களைஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தியாக இருக்கமுடியாது.

ஆகவே அபிவிருத்தி அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்றால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம். அதுமாத்திரம் அல்ல இங்குச் சட்டவிரோதத்திற்கும் விதிமுறைக்கும் அப்பாற்பட்டு மணல் அகழ்வு தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது இது தொடர்பாக சில மாதங்களுக்கு மன்னர் நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தாலும் சில அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விமர்சனமும் பரவலாக முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே உயர் அதிகாரிகளைக் கொண்டு தீர்க்கமான நடவடிக்கை எடுத்துள்ளோம் எதிர்வரும் காலங்களிலும் விதிமுறைக்கு முரணாக மண் அகழ்வுகள் இடம்பெறுமாயின் இது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுள்ளோம்.

இந்த அனர்த்தங்கள் மூலமாகக்கூட சரியான பாடங்களை கற்றுக் கொள்ளாவிட்டால் ஈது ஒரு பரவலான பாதிப்புக்கு வழியமைக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. எனவே இந்த விடயம் தொடர்பாகப் பொறுப்பு கூறவேண்டிய அதிகாரிகள் இன்னும் பொறுப்புடன் செயற்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

வைத்தியசாலைகள், அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களின் நஷ்டஈடுகள், விவசாய நிலங்கள் தொடர்பான சரியான மதிப்பீடுகள் உட்பட பல்வேறு தரப்பட்ட விடயங்கள் இந்த குழுக்கூட்டத்தில் கலந்துரையாடித் தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் தீர்வுகள் எட்டப்படாதவிடயங்கள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் தீர்வுகளை எட்டுவதற்காக எமது தலையீடு இருக்கும். என்பதில் ஐயமில்லை - என்றார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட மேலதிகச் செயலர்களான சுதர்ஷனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மீன்பிடி, விவசாய திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள்; கலந்துகொண்டனர்.

# புளியம்பொக்கனையின் விவசாயிகள் வேதனை

## வெள்ளத்தால் வயல்கள் அழிவு

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்திற்குற்பட்டதுவரையாற்றைஅண்டியபகுதிகளிலுள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள அனர்த்தத்தால் அழிவடைந்துள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 600 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு அழிவடைந்துள்ளள என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடுக்குளத்தின் வான் நீர் பாய்ந்தமையாலேயே குறித்த அழிவு இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடனைப்பெற்று நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் தாம் கடனை எவ்வாறு செலுத்தப்போவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் தமது வயல்நிலங்களை பார்வையிட்டு தமக்கு நஷ்ட ஈட்டை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.



அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருட காலபோக நெற்செய்கையில் பாரிய அளவிலான நோய் தாக்கம் ஏற்பட்டு அறுவடையின் போது பாரிய வீழ்ச்சியை கண்டனர். அதே போன்று இம்முறையும் வெள்ளத்தால் பல விவசாயிகளின் நெற்செய்கை அழிந்துள்ளன எனக் கவலை தெரிவித்துள்ளனர். (316)



காலைக்கதிர் Kalaikkathir

# எதிர்க் கட்சிகளைப் புறக்கணிக்கின்ற அரசின் செயற்பாடு கவலையளிக்கிறது

## இம்ரான் எம்.பி தெரிவிப்பு



(ஹஸ்பர்)

எதிர்க்கட்சிகளைப் புறக்கணிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடு மிகவும் கவலையளிக்கின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

சீர்றகாலநிலையைஅடுத்து அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

ஆளுங்கட்சி பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இக் கூட்டத்திற்கு இம்மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது மிகவும் கவலையான செய்தியாகும்.

திருகோணமலை மாவட்ட மக்களின் வாக்குகளால் தான் நானும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன்.

எனவே, பாதிக்கப்பட்ட எனது மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டியது எனது கடமையாகும். இந்த உரிமையை இந்த அரசாங்கம் எனக்கு மறுத்துள்ளது.

இதனால் எனது மக்களின் பாதிப்புத் தொடர்பாகவும், மீள்கட்டுமானம் தொடர்பாவும் தகவல்கள் பெறப்படுவது மறுக்கப்பட்டுள்ளது.

வளமான நாடு என்ற கோசத்துடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் இப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டால் எப்படி வளமான நாட்டை உருவாக்க முடியும் எனக் கேட்க விரும்புகின்றேன். - என்றார்.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் இடர் பாதித்த மக்களுக்கு உதவி

## சாவ.இந்து 83 சாதாரண தர மாணவர்களின் நிதி அனுசரணையில்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் 1983 சாதாரணதர பழைய மாணவர்களின் ஒரு லட்சம் ரூபா நிதி அனுசரணையில் சுன்னாகம் லயன்ஸ்கழகத்தினரால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட - வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட - தந்தை செல்வாபுரம், துர்க்காபுரம் ஆகிய கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் 40 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில்நிகழ்வில்ஒழுங்கமைப்பாளரும் சாவகச்சேரி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினருமாகிய லயன் ஆ.ஜெயபாலன் வலி.வடக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் சி.ஹரிகரன், லயன் பா.மரியதாஸ், லயன் செ.விஜயராஜ் மற்றும் லயன் க.டினேஷ் ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.







வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## ஊடக....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துவிட்டது. இவ்வாறு நீங்கள் கூறிய விடயங்களைச் செய்யும் போது அது மக்கள் சார்பான, மக்களுக்கு சாதகமாக அமைந்தால் எதிர்க்கட்சியின் ஆதரவை அதற்குப் பெற்றுத் தருவோம்.

நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமான திட்டங்களுக்குஎமது முழுமையான ஆதரவை வழங்குவோம். அவ்வாறே, நாட்டுக்கு கேடு விளைவிக்கும் திட்டங்களை எதிர்ப்போம். அதில் உள்ள குறைகளைச்சுட்டிக்காட்டுவோம், அதற்கான மாற்று வேலைத்திட்டங்களையும் முன்வைப்போம். இதுதான் எமது கொள்கை.

மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தாம் முகம்கொடுத்து வரும் பிரச்சினைகளை முன்வைத்து ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 5 வருடம் கொரோனா காலத்தின் போது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இவர்கள் பெரும் பங்களிப்பை செய்துள்ளனர்.

இவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தரப்பினர் இவ்வாறு கோரிக்கைகளை முன்வைக்கும் போது கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவதை விடுத்து அடக்குமுறைக்கு வழிவகுப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை திருத்தி, உழைக்கும்போது அறவிடும் வரியை ஒரு இலட்சத்தில் இருந்து 2 இலட்மாக அதிகரிப்பதாகவும் வற் வரியை குறைப்போம்என்று ஆளும்தரப்பினர் தேர்தல் மேடைகளில் தெரிவித்தனர். ஆனால் இதில் இன்றுஎந்த மாற்றமும் நடக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கஆளும்தரப்புமுன்னெடுத்தஇதே முறை தொடர்வதை அனுமதிக்க முடியாது. எனவே, இந்த இணக்கப்பாட்டை தேர்தல் மேடைகளில் கூறியது போல் மக்களுக்கு சார்பான இணக்கப்பாடாக மாற்றுவதற்கு தற்போதைய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு என்பது இதுவரை காலமும் கௌரவமான அரசியல் உரிமைகளை இந்த நாட்டிலே பெற்றுக்கொள்வதற்காக தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்கு கிடைத்துள்ள சிறிதளவான பரிகாரமாகவே நோக்கப்படுகின்றது.

மாகாணசபை முறைமையினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான தீர்வினை காண முடியும் என்பதை ஈ.பி.டி.பி. கட்சியினராகிநாமும்கடந்த35வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் 13 ஆம் திருத்தச் சட்டத்தினை பாதுகாப்பதற்காக பல்வேறு முயற்சிகளையும் நாம் மேற்கொணாடிருந்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

குறிப்பாக 2010 - 2015 காலப் பகுதியிலும் 13ஆம் திருத்தச் சட்டத்தினை வலுவிழக்கச் செய்யும் முயற்சியை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்த அப்போதைய ஆட்சியாளர்கள் முன்னெடுத்திருந்த நிலையில், ஆளும்தரப்பு அங்கமாக நாம் இருந்தபோதிலும், ஆளும் தரப்பில் அப்போதிருந்த தென்னிலங்கையை சேர்ந்த முற்போக்காளர்களான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எதிர்த்தோம். எமது ஆட்சேபனையை வெளிப்படுத்திய நிலையில் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

அண்மையில்சிநேகிதபூர்வமாகஉங்களை சந்தித்தவேளையிலும், 13ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும், அதனைக் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமான பொறிமுறையாக இருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அத்துடன், அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு உங்களுக்கு கிடைத்திருக்கின்ற நிலையில், அவர்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு, புதிய அரசமைப்புத் தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னர் தற்போதைய அரசமைப்பினை முழுமையாக நடைமுறைப்படுத்தி பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆக, உங்களுக்கு இருக்கும் தார்மீக கடப்பாட்டின் அடிப்படையிலும், தேர்தல் காலத்தில் எமது மக்களுக்கு நீங்கள் வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையிலும், 13ஆம் திருத்தச் சட்டத்தினை தொடர்ந்தும் பாதுகாப்பதோடு மாகாண சபைகளுக்கான தேர்தலைக்கூடிய விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்' என்றுள்ளது.

## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனமக்களையும்ஒன்றிணைக்கும்வரலாற்று சிறப்பு மிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நாங்கள் மலினப்படுத்த போவதில்லை என பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுடன் நாட்டு மக்கள் ஊழல் அரசியல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவந்துள்ளார்கள்.அத்துடன் ஊழல்மிக்க அரசியல்வாதிகளையும் மக்கள் புறக்கணித்துள்ளார்கள். அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து புதிய ஆளும்தரப்பை மக்களாணையுடன் உருவாக்கியுள்ளோம்.

சிறந்த மாற்றத்தை முன்னிலைப்படுத்தி மக்கள் தோற்றுவித்த ஆளும்தரப்பின் பொறுப்பையே ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் முன்வைத்துள்ளார். மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

அதிகாரத்தை சிறந்த முறையில் மக்களாட்சிக்கு அமைய செயற்படுத்தும் பொறுப்பு எமக்கு உண்டு. மக்களின் எதிர்பார்த்தை சிறந்த முறையில் நாங்கள் நிறைவேற்றுவோம். புதிய அரசியல் மாற்றத்துடன் மக்கள் இனவாதத்தை புறக்கணித்துள்ளார்கள்.

அரசியலுக்காக மாகாணங்களையும், மக்களையும் வேறுபடுத்திய காலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்குவதற்கு இனி இடமளிக்கப் போவதில்லை. அரசியலில் தோல்வியடைந்துள்ளவர்கள் மீண்டும் இனவாதத்தைதூண்டிவிட முயற்சிக்கிறார்கள்.

இனவாத செயற்பாடுகளை தோற்கடிக்க கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் வரலாற்று சிறப்பு மிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நாங்கள் மலினப்படுத்த போவதில்லை. இனவாதத்துக்கு இனி இடமில்லை.

பொருளாதாரம், சமூகம், அரசியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்த நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றோம். நாட்டைப் பொறுப்பேற்கும்போது நாட்டில் பொலிஸ் மா அதிபர் இருக்கவில்லை.

அமைச்சரவையின் தீர்மானத்தை உயர் நீதிமன்றம் புறக்கணித்த நாட்டையும், ஆளும்தரப்பின் தீர்மானத்தை ஆணைக்குழு புறக்கணித்தநாட்டையுமேபொறுப்பேற்றோம். பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய செயற்பட வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

இனவாதம் இல்லாத நாடு ஒன்று அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் தேசிய மக்கள் சக்தி இந்த ஆளும்தரப்பை உருவாக்கியுள்ளது என்பது அனைவரும் பாராட்டக்கூடிய விடயமாகும். இந்த முறை தேர்தலில் வாக்களிப்பும் இன பாரபட்சம் இல்லாத வகையிலேயே நடந்துள்ளது. இது தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இது நாட்டின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் சிறந்த சகுனம் என்பது எனது கருத்து.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மாற்றிய மைக்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அண்மையில் தெரிவித்திருந்தார். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும்போது அதில் 13ஆவது திருத்தம் உள்ளடக்கப்பட்டு அதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழி வகுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். அது உண்மையில் வரவேற்கக் கூடிய விடயம்.

அதேவேளை, புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் போது மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் அதன் மூலம் இலங்கையில் இனங்களுக்கிடையில் நிலவும் குரோதங்கள் இல்லாதொழிந்து சிறந்த நிலை ஏற்படுமாயின் அதை நாம் வரவேற்கின்றோம் என்பதுடன் அதற்கு நாம் முழு ஆதரவளிப்போம் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

இந்தியாவால்கொண்டுவரப்பட்ட13ஆவது திருத்தத்தை மாற்றி இந்தியாவுக்கு எதிராக செயற்படுவதைதவிர்த்துக்கொள்ளவேண்டும். அது தொடர்பில் சிந்தித்து செயற்படுவது அவசியம். பூகோள ரீதியில் எமக்கு மிக அண்மித்த நாடு இந்தியா. அந்த நாட்டைப் பகைத்துக் கொண்டு அல்லது சீனாவோடு நாம் சேர்ந்து கொண்டு எதையும் சாதிக்க முடியாது என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

இன்று எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது அதனால் தான் அரசாங்கங்கள் தமது முழுமையான ஆட்சிக் காலத்தை நிறைவு செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டது. கோட்டாபய வீட்டுக்கு போனாதால்தான் தற்போதைய அரசாங்கத்துக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனால் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைநல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## இடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டில் அண்மைக் காலமாக நிலவி வரும் மோசமான காலநிலையினால் ஏற்பட்ட இடர் காரணமாக சுமார் 5 இலட்சம் மக்கள் துயரத்தினாலும் அழுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆளும்தரப்பு இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அவசர வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இடர் முகாமைத்துவ சட்டத்தின்படி, இடர் முகாமைத்துவ தேசிய சபையைக் கூட்டி, இதுதொடர்பில்நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன்,புதியவானிலைதகவல்களைப் பெறுவதற்கு நவீன தொழில்நுட்பக் கட்டமைப்புகளை நிறுவவேண்டும். உலக வங்கியும், ஜப்பானும் இதற்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கத் தயாராக உள்ளன. எனவே இவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அத்துடன் பயிர் சேதத்தினால் நாட்டின் உணவுக் கட்டமைப்புக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். பயிர் சேதம் குறித்து முறையாக மதிப்பீடு செய்து, குறிப்பிட்ட நிவாரணத்தை உரியவர்களுக்கு வழங்க வேண்டும். புள்ளி விவரங்களை மாற்றாமல் இவற்றை சரியாக வழங்க வேண்டும்.

மேலும் ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்த பிரகாரம் 25,000 ரூபா உர மானியம் 217,985 பேருக்கு மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 15,000 ரூபா இரண்டு சுற்றுக்களில் முறையே 228,000 மற்றும் 165,000 பேருக்கும் கிடைக்க வேண்டியுள்ளது. ஆளும்தரப்புக் கூறியதன் பிரகாரம் 25,000 ரூபா மானியம் முறையாக வழங்கப்படவில்லை. எனவே இதனை முறையாக முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரிசித் தட்டுப்பாட்டுக்கு முறையான தீர்வொன்று காணப்பட வேண்டும். வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்யமாட்டோம் என மேடைகள் தோறும் கூறிய தற்போதைய ஆட்சியாளர்கள் இன்று அரிசியை இறக்குமதி செய்து ஆரம்பித்துள்ளனர்.

பொருட்களின் விலை வேகமாக அதிகரித்து வருகிறது. குடிமக்களின் உணவு மற்றும் உணவு அல்லாத செலவுகளை புரிந்துகொண்டு, அரிசி தட்டுப்பாட்டைத் தீர்க்க நிலையான திட்டங்களை ஆளும்தரப்புக் கொண்டு வரவேண்டும்.

இந்த விடயத்தில் நிலைபேறானதொரு நிலையைப்பேணிவருவது குறித்துக்கவனம் செலுத்தவேண்டும். எரிபொருள் விலைச் சூத்திரத்தை ஏற்க மாட்டோம், மக்கள் ஆணை கிடைத்தவுடன் எரிபொருள் சூத்திரத்தை நீக்கிவிட்டு, எரிபொருள் விலையைக் குறைப்போம்என்று சொன்னாலும், இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆளும்தரப்புச் சொன்னதைச்செய்வதாகஇருந்தால்இதையும் உரியவாறு செய்ய வேண்டும் என்றார்.

## ஆளும்தரப்போடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் பல விடயங்களை குறிப்பிட்டிருந்தாலும் 80 வருடங்களாக இந்த மண்ணில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அவர் ஒரு வார்த்தைகூடப் பேசாது விட்டது துரதிஸ்டவசமானது.

இதே நாடாளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ச தனது கொள்கைப் பிரகடன உரையிலும் அதற்கு பின்னர் அவர் இந்தியா சென்றபோது இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும் இந்த நாட்டில் உள்ள பிரச்சினை தொடர்பில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு வார்த்தைகளையும் பேசாது தவிர்த்தார். அந்த தவிர்ப்பு என்பது இந்த நாட்டில் அவரை அடையாளம் தெரியாமல் ஆக்கிவைத்தது என்ற வரலாற்றை நீங்கள் ஒரு முறை திரும்பிப்பார்க்க வேண்டும் .

தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்கள் என்ற பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது. அதை நாங்கள் பாராட்டுகின்றோம். நாங்கள் இரத்தமும்சதையுமாககண்ணீரோடுவாழ்ந்த இனம். சிங்களசகோதரர்களினால்தம்மவர்கள் மீது நடத்தப்பட்ட போரால் மிகப்பெரியளவில் பாதிக்கப்பட்ட இனம். இன்றும்விடுவிக்கப்படாத காணிகள், இராணுவ முகாம்கள், எங்களின் வாழ்க்கை முறையில் எல்லாம் நாங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இனமாக உள்ளோம். இந்த நிலையில்கூட உங்களோடு எமது கரங்களைச் சேர்த்துப் பயணிக்க விரும்புகின்றோம். உங்களின் பலமான மாற்றங்களோடு தமிழ் மக்கள் தமது மாற்றங்களை நோக்கி நகரவும் நாங்கள் தயாராகவிருக்கின்றோம்.

நாங்கள் எதற்கும் எதிராளிகள் அல்லர். நாங்கள் பலகாலங்களில் பல பேச்சுக்களை நடத்தியுள்ளோம். ஆனால் பேச்சுக்கள், உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. எழுதப்பட்டுள்ள ஒப்பந்தக்கால் எல்லாம் ஒன்றில் கிழித்தெறியப்பட்டுள்ளன. அல்லது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் போல் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன.

தற்போது மாற்றம்வந்துள்ளது. எதனையும் செய்யக்கூடியவல்லமையுடன்வந்துள்ளீர்கள். நாங்கள் நீண்டகாலமாக போராடிகிட்டத்தட்ட 4 இலட்சம் தமிழ் மக்கள் இறந்துள்ளார்கள் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் இந்த மண்ணில் விதைக்கப்பட்டுள்ளார்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் இழந்தும்நம்பிக்கையோடுநிமிர்ந்துநிற்கின்ற இனம், உங்களோடு கைகோர்க்கத் தயார் என்று இன்றும் எங்களுடைய சமாதானக் கதவுகளைத் திறந்தபடி உங்களுடன் நாங்கள் பேசுகின்றோம். காரணம் இந்த நாட்டில் நீங்கள்நீங்களாகவும்நாங்கள்நாங்களாகவும் எங்களின் உரித்துக்களோடு வாழவேண்டும் என்ற உன்னதமான எண்ணம்தான். உயர்ந்த குணங்களோடும் உங்களோடு கரம் கோர்க்க நாங்கள் தயார்.

சிங்கள மக்களின் தேசிய அடையாளங்கள், உங்களின் இன , மத கலாசார அடையாளங்களை, நில. மொழி அடையாளங்களை நாம் மதிக்கின்றோம். இது ஓர் இனத்துக்குரியது. அதேபோல் இந்த மண்ணில் 21ஆம் நூற்றாண்டின் காலத்துக்கு நீங்கள் வருவதெனில் இப்போதுள்ள காலச்சூழலில் எவ்வாறான விடயங்களை கையாள வேண்டும், எவ்வாறு அரசியல் மாற்றங்களை நோக்கி நகர வேண்டும் என்பதில் உங்களின் கரிசனையை, எண்ணங்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# சிறந்த நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபடுங்கள்

## பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் அழைப்பு

கட்சி பேதமின்றி இந்த நாட்டை கட்டியெழுப்பவும் எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு நாட்டை ஏற்படுத்தவும் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டு செயற்ட முன்வரவேண்டும் என தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சர் முனீர் முழுப்பர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாத்தில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைவரலாற்றில்கம்பஹாமாவட்டத்தில்இருந்துஇதுவரைமுஸ்லிம் ஆண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. ஆனால் இந்தமுறை தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என எந்த பேதமும் இன்றி எனக்கு வாக்களித்து எனது வெற்றிக்குப் பெரும் சக்தியை வழங்கியுள்ளனர்.

அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் நாடு முழுவதும் மக்கள் எமக்கு அளித்த வாக்கின் மூலம் இந்த நாட்டை இன, மத, பேதமின்றி கட்டியெழுப்ப வடக்கு, கிழக்கி. தெற்கு, மேற்கு மலையகம் என அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர் என்ற அறிவிப்பை வழங்கியுள்ளனர்.

எமது நாட்டின் நீண்டகால பிராத்தனையாக இருந்தது தேசிய ஐக்கியமாகும். கடந்த காலங்களில் அதிகாரத்தைதக்கவைத்துக்கொள்வதற்காக இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தவும் மதங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தவும் முயற்சித்து வந்ததை எமக்கு காணக்கூடியதாக இருந்தது.

சமூகவலைத்தலங்களை ஊடகங்களை அடக்க முற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என்றே ஜனாதிபதி எப்போதும் தெரிவித்து வருகிறார்.

மக்களை தூண்டி. மக்களை பிளவுபடுத்தும் விடயங்களை சுதந்திரமாக மேற்கொள்ள இடமளித்தால், ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த எமக்கு முடியுமா என்பது கேள்விக்கிறியாகும்.

நாட்டில் இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதேபோன்றுஎந்தவகையானமதஅடிப்படைவாதத்துக்கும் தலைதூக்க இடமளிப்பதில்லை என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

நாங்கள் இனவாத, மதவாத கலவரங்களால் பாரியளவில் பாதிக்கப்பட்டிருக்கிறோம். யுத்த மோதல் காரணமாக நாங்கள் 90 பில்லியன் அமெரிக்க டொலர்களை இழந்திருக்கிறோம்.

அதனால் எமக்கு அரசியல் செய்ய போராட்ட கோஷங்கள் இருக்கலாம். ஆனால் அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள ஒருபோதும் இனவாத கோஷத்தை கையில் எடுப்பதில்லை ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதுவே எமது ஆளும்தரப்பின் கொள்கையாகும்.

அதனால்தான் இந்தமுறை தேர்தலில் எமதுநாட்டு மக்கள் இனவாதம் மதவாதத்துக்கு எதிராகவாக்களித்துள்ளனர். கடந்த காலங்களில் இனவாத செயற்பாடுகளை மேற்கொண்டவர்களை மக்கள் இந்த தேர்தலில் தாறேகடித்துள்ளனர்.அதனால் நாங்களும் கட்சி பேதமின்றி இந்த நாட்டைகட்டியெழுப்பவும் எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு நாட்டை ஏற்ப டுத்தவும் இனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டு செயற்டப முன்வரவேண்டும் என்றார்.

### ஆளும்தரப்போடு....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக உங்களுடன் பேசுவதற்கும் சிங்கள மக்களின் எண்ணங்களோடு சேர்ந்து செல்வதற்கும் இந்த நாட்டில் நாங்களும்எங்களுக்குரிய மொழி, பண்பாடு, எங்களுக்குரிய நில அடையாளங்களோடு வாழ அனுமதிக்கவேண்டும்.

இலங்கையின்பூர்வீககுடிகளானநாம்இந்த தேசத்தில்உங்களின்இனக்குழுமமாகசேர்ந்து வாழநாங்களும்நீங்களும்தேசத்தில்ஒன்றாக இருந்தாலும்இரண்டுபட்ட தேசங்களுக்குரிய இரண்டுபட்ட இனக்குழுமங்கள் என்ற அடையாளத்தோடு வாழ்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம் .

நாட்டில் சமாதானம், சமத்துவம், சம உரிமை உண்மையானது. நாங்கள் யாரும் அதனை நிராகரிக்கவில்லை. ஆனால் ஓர் இன அடையாளம், ஓர் இனத்தினுடைய உரிமை, அந்த இனத்தினுடைய இருப்பு என்பது வித்தியாசமானவை. அதனை நாம் சம உரிமையாகச் சொல்ல முடியாது. சமஉரிமையுள்ளது ஆனால் இனத்தின் அடையாளத்தை விற்ற சமஉரிமையல்ல. ஒரேநாடு, ஒரேமொழி , ஒரே தேசம் என்பது ஒரு இனத்துக்குரியதாக அமைய முடியாது . இது பல் தேசிய இனங்கள் வாழ்கின்ற நாடு. இங்கு நீண்டகாலமாக இனக்குழும ரீதியாக போராடிவருகின்ற எங்களுடைய எண்ணங்களை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

சமரசம் என்பது நாங்களும் நீங்களும் கை குலுக்கிக்கொள்வதல்ல. நாங்கள் இனத்தனித்துவங்களை அதாவது பேசப்படும் சமரசங்கள் இனத்தனித் துவங்களை இழந்ததாக இருக்க முடியாது. ஆகவே தமிழ் தேசிய இனத்தின் தனித்துவங்களை நீங்கள் மதித்து நடப்பதில்தான் உங்களுக்கும் எங்களுக்குமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள் கைகூடிவரும். நாம் வரலாற்று ரீதியாக பல நெருக்கடிகளை சந்தித்தவர்கள். குறிப்பாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து வரலாற்று சிந்தனைகளை கைவிட்டு 21ஆம் நூற்றாண்டுக்குரிய நவீன சிந்தனையின்படி இனப்பிரச்சினையை அணுக வேண்டும்.

சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்களும் இணைப் பங்காளர்கள் என்ற மனப்பாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசு தயாராக வேண்டும். நாங்களும் நீங்களும் இந்த தேசத்தின் இணைப்பங்காளர்களாக இருக்கவேண்டும் என்றால் எங்களது உரிமைகள் மதிக்கப்படவேண்டும் எங்களது தேசம், வாழ்வு, இருப்பு உங்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்போது தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுகின்றபோது நாங்களும் நீங்களும் இந்த தேசத்தை கட்டியெழுப்பி பெருமனிதர்களாக மாறுவோம் என்றார்

### கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரித்த நீதிவான் கிருசாந்தன் மீனவர்களை டிசெம்பர் 10வரை விளக்கமறியலில்வைக்குமாறுஉத்தரவிட்டார். இதையடுத்து 18 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### ஜனாதிபதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்சாணக்கியன்எழுப்பியகேள்விக்குப் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து கேள்வியெழுப்பிய இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை முன்வைக்கிறேன்.

மாகாணசபை முறைமையை இரத்துச் செய்வதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். இவ்விடயத்தில் ஆளும்தரப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன? தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இவ்விடயத்தை ஆளும்தரப்புத் தெளிவுப்படுத்தவேண்டும். இது ஜனநாயக அவை ஆகவே ஆளும்தரப்பின் நிலைப்பாட்டைக் குறிப்பிடுங்கள் என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, சாணக்கியன் மீது மரியாதை உள்ளது. ஆகவேஏனையோர்குறிப்பிடுவதைக் கேட்டுமுறையற்றசந்தேகங்களைமுன்வைக்க வேண்டாம். மக்கள்விடுதலைமுன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா இன்றி, தமிழ் அரசுக் கட்சியினர் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஒழுங்குப்படுத்தப்படும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிறிதரன் ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு அனுமதி கோரியுள்ளார். இந்த வாரம் சந்திப்புக்கு வாய்ப்பளிக்கப்படும். சாணக்கியன் ஜனாதிபதியைச் சந்திக்கும்போது இவ்விடயம் தொடர்பில் உரிய நிலைப்பாட்டை அறிந்துக் கொள்வதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்போம் என்றார்.






காலைக்கதிர் Kalaikkathir

அம்பாறையில்

# கரைவலை மீனவர்களுக்கும் வெள்ளத்தால் கடும் பாதிப்பு

(பாறுக் ஷிஹான்)

அடை மழைகாரணமாக ஏற்பட்ட வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சியில் கடலை அண்டிய தோணாக்கள் தோண்டிய பகுதிகளில் ஆற்றுவாழைகள் எனப்படும் ஒரு வகையான தாவரங்கள் நிரம்பிக் காணப்படுவதால் மீனவர்கள் பெருஞ் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.



கடந்த ஒருவார காலமாக வடக்குகிழக்கு ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக திறந்து விடப்பட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் இருந்து இவ்வாறான தாவரங்கள் கடலுடன் சங்கமித்திருப்பதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.



இவ்வாறு கடற்கரையில் கரையொதுங்கிய ஆற்றுவாழை மற்றும் ஆகாய தாமரை போன்ற சல்லு தாவரங்களால் கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர, கடற்கரை பகுதியில் இவ்வாறான தாவரங்கள் அதிகமாக காணப்படுவதால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இத்தாவரங்களில் நச்சுப் பாம்புகள் இதர உயிரை கொல்லும் பாம்புகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்த உரிய அதிகாரிகள் இப்பிரச்சினையில் கவனமின்றி செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் கரையொதுங்கி காணப்படுகின்ற இத்தாவரங்களில் ஏரிகள் மற்றும் குளங்களில் காணப்படுகின்ற பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் மக்கள் வாழ்விடங்களை நோக்கிவருகின்ற ஒருதுர்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

மாலை வேளையில் கடற்கரையை நோக்கி தமது ஓய்வு நேரங்களை களிக்க கூடிய சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட மக்கள் வருகின்ற போது இவ்வாறான ஜந்துக்களால் உயிராபத்துக்கள் ஏற்படுகின்ற நிலையும் காணப்படுவதனால் கரையோரப் பாதுகாப்பு மாநகர சபை பிரதேச செயலகங்கள் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் பொதுமக்கள் ஆகியோர் இவற்றை கவனத்தில் கொண்டு கரையோர பிரதேசங்களைசுத்தம்செய்துதமது தொழிலை மேற்கொள்ளவும் பாதுகாப்பானது ஒரு சூழலை ஏற்படுத்தித் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கமநல காப்புறுதி சபை பற்றி முறையிட குறைகேள் சேவை

கிளிநொச்சியில் நேற்று நடந்தது

கமநலகாப்புறுதிச்சபையால் கடந்த போகங்களில் பயிர் அழிவுகளுக்கு காப்புறுதி பெற்ற வர்கள் பெற்ற காப்புறுதியில் திருப்தியின்மை காணப்படுப் படுமாயின் அது தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கான நடமாடும் சேவையை கிளிநொச்சி மாவட்ட கமநல காப்புறுதிச்சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்றைய தினம் புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்தில் இது முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது விவசாயிகள் தமது முறைப்பாடுகளை முன்வைத்தனர்.குறித்தநடமாடும் சேவையில்கிளிநொச்சிமாவட்ட கமநல காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (113)

# நேரக்கணிப்பாளரின் மீது வவுனியாவில் தாக்குதல்?

பஸ் நிலையத்தில் அமைதியின்மை

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அரச, தனியார் பஸ் தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த அரச பஸ் தரப்பினருக்கும் தனியார் பஸ் தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அரச பஸ் புறப்படுகின்ற நேரம் தொடர்பிலேயே குறித்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பஸ் நிலையப் பகுதியில் இரு தரப்பிற்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, பஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துச் சபையின் நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்து அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், அரச பஸ் ஒன்றும் தனியார் பஸ் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

(100)

# சர்வதேச எய்ட்ஸ் தினத்தினை முன்னிட்டு கல்முனையில் நடைபவனி, விழிப்புணர்வு

சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய பாலியல் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு ஏற்பாடு செய்த நடைபவனியும் விழிப்புணர்வு செயலமர்வும் திங்கட்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்தியபாலியல்எய்ட்ஸ்தடுப்புபிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எல்.ஜலால்டீனால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

'உரிமைப் பாதையில் செல்' எனும் தொனிப்பொருளில்நடைபெற்றஇந்நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச செயலாளர்கள்,வலயக்கல்விபணிப்பாளர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாவட்ட எயிட்ஸ் குழு உறுப்பினர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன், பிராந்திய பாலியல் எய்ட்ஸ் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.ஜலால்டீன், சம்மாந்துறை மேலதிக





சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி ஆகியோர் விரிவுரை ஆற்றினார்.

சர்வதேச எய்ட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசெம்பர் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் எய்ட்ஸ் நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் அதனால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சத்திய சாயி பாபாவின் 99 ஆவது ஜனன தினம்

(கேதீஸ்)

பகவான் சத்திய சாய் பாபா வின் 99 ஆவது ஜனன தினத்தையொட்டி தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தினூடாக சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.



இந்த நிகழ்வுகள் தலவாக்கலை சாய்சேவா மத்திய நிலையத்தின் தலைவர் எம்.மகேஸ்வரன் தலைமையில் தலவாக்கலை ஆர்த்தி மஹால் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



இந்த நிகழ்வில் தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தின் செயலாளர் இளங்கோவன், முன்னாள் தலவாக்கலை லிந்துலை நகரசபை தலைவர் அசோக சேபால மற்றும் சாய் பக்தர்கள் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# இடர் நிவாரணத்துக்காக ரூ. 345 மில்லியன் ஒதுக்கீடு

## சபையில் ஆளும்தரப்பு அறிவிப்பு

கடும் மழையுடனான சீரற்ற கால நிலையினால் நாட்டில் 24 மாவட்டங்களில் 1, 39,439 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 69 ஆயிரத்து 872 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 18 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆளும்தரப்பு 345 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் அதன் பாதிப்புகள் அது தொடர்பில் ஆளும்தரப்-பு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட இடரால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி மற்றும் ஆளும்தரப்பின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பாதிக்கப்பட்ட அனைத்து மக்கள் தொடர்பிலும் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இடம்பெற்ற இடரால் நாட்டின் 24 மாவட்டங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மாகாணங்கள் உட்பட பல மாவட்டங்களிலும் இந்த பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தொடர்ச்சியாக நாட்டில் பெய்த கடும் மழையே இதற்குக் காரணமாகும்.

கடும் மழையுடனான சீரற்ற கால நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆளும்தரப்பு 345 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நாட்டில் 24 மாவட்டங்களில் 1, 39,439 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 69 ஆயிரத்து 872 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 18 பேர் பலியாகியுள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 247 நலன்புரி நிலையங்களில் 12, 300க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 600 பேர் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளர். அவர்களில் 7,600ற்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவசர நிலையை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முப்படையினர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனைத்து பணிப்புரைகளையும் வழங்கினார்.

உயிராபத்துக்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காகஅனைத்துநடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார். ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில்நவம்பர்27விசேடகூட்டம்ஏற்பாடு செய்யப்பட்டு முப்படையினர், பொலிசார், மாவட்டச்செயலாளர்கள் அந்தந்த துறைகளின் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டு, நிதி, நிவாரணம்,தொழில்நுட்பம்உள்ளிட்டஅனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

அதற்கு தேவையான போதியளவு நிதியை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொடுப்பதாகவும் அதன் போது தெரிவித்திருந்தார்.அந்த வகையில் ஆளும்தரப்பு இது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள், அந்தந்த பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமைகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

நவம்பர் 23 முதல் நாடு இத்தகைய இடர்களை எதிர்கொண்டது. இதுவரை இடம்பெற்றுள்ள பாதிப்புகள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் தெளிவுபடுத்தியுள்ளது. மேற்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக திறைசேரியினால் 345 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது என்றார்.

## முதற்கோலாசான் நியமனம்

பத்தாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் முதற்கோலாசானாக நாடாளுமன்றஉறுப்பினர்கயந்தகருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதாகசபாநாயகர் அசோக ரன்வல சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகளின்போது சபாநாயகரின் அறிவிப்பின்போதே எதிர்க்கட்சியின் முதற்கோலாசானாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கயந்த கருணாதிலக்கவின்பெயர்அறிவிக்கப்பட்டது. கடந்த நாடாளுமன்றத்தில் இந்தப் பதவியில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2024இல் வெளியிடப்பெற்றது